**விஸ்வதீப்தி மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி**

**ஐந்தாம் வகுப்பு தமிழ் இரண்டாம் பருவம்**

**கற்றல் பயிற்சித் தாள்**

**செய்யுள் – திருக்குறள்**

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. அறிவுமிக்கவர்கள் பகைவரிடமும் பண்பு கெடாமல் நடந்து கொள்வார்கள்.

2. நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

3. திருக்குறள் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

4. திருக்குறளை இயற்றியவர் திருவள்ளுவர்.

5. நற்பண்பு உடையவர் செய்யும் செயலாலே உலகம் இயங்குகிறது.

6. மனிதப் பண்பு இல்லாதவர் மரத்தை போன்றவர்.

7. திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.

8. பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று திருக்குறள்.

9. விளையாட்டாக கூட ஒருவரை இகழ்ந்து பேசக்கூடாது.

10. நல்ல பண்பை உலகத்தார் போற்றிக் கொண்டாடுவர்.

11. இகழ்ச்சி சொல்லின் பொருள் இகழ்தல்.

12. பெருஞ்செல்வம் இச்சொல்லை பிரித்து எழுத கிடைப்பது

பெருமை + செல்வம்

13.பண்புடைமை இச்சொல்லை பிரித்து எழுத கிடைப்பது .

பண்பு + உடைமை

14. மரம் + போல்வர் இச்சொல்லை சேர்த்து எழுத கிடைப்பது மரம்போல்வர்

15. செய்யுளில் நேர்மை என்னும் பொருள் தரும் சொல் நயன்.

**II. செய்யுளில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து எழுதுக:**

**நகையுள்ளும் – பகையுள்ளும், பண்பு - மண்புக்கு**

**III. அன்புடைமை பண்புடைமை என்பன போல் ஈற்றில் மையென முடியும் நான்கு சொற்களை எழுதுக:**

**அறிவுடைமை, ஒழுக்கமுடைமை, அடக்கமுடைமை ஆள்வினையுடைமை**

**IV. பொருள் தருக:**

1. இகழ்ச்சி - இகழ்தல்
2. பாடறிவார் - பிறரின் இயல்பு புரிந்து நடப்பவர்
3. நன்றி – நன்மை
4. புக்கு - புகுந்து
5. மாய்வது - அழிவது
6. அறம் - வாழை கூர்மையாக்கும் கருவி
7. போல்வர் - போன்றவர்
8. பெருஞ்செல்வம் - மிகுந்த செல்வம்
9. நன்பால் - நல்ல பால்

**V. எதிர்ச்சொல் எழுதுக:**

1. மாய்வது x அழிவது
2. பாராட்டும் x தூற்றும்
3. தீமை x நன்மை
4. பண்புடையார் x பண்பிலார்

**VI. பிரித்து எழுதுக:**

1. அன்புடைமை – அன்பு + உடைமை
2. பயனுடையார் - பயன் + உடையார்

3. அதுவின்றேல் – அது + இன்றேல்

4. மக்கட்பண்பு - மக்கள் + பண்பு

5. கூர்மையரேனும் - கூர்மையர் + ஏனும்

6. திரிந்தற்று - திரிந்து +அற்று

**VII.சேர்த்து எழுதுக:**

1. பண்பு + உடைமை - பண்புடைமை
2. நன்மை + பால் - நன்பால்
3. பண்பு + இலான் - பண்பிலான்
4. பெருமை + செல்வம் - பெருஞ்செல்வம்

**VIII. வினாக்களுக்கு விடையளிக்க:**

1. பாடறிவார் எவ்வாறு நடந்து கொள்வார்?
**பாடறிவார் பிறரின் இயல்பு புரிந்து நடந்து கொள்வார்.**

2.மரம் போன்றவர் என திருக்குறள் யாரை குறிப்பிடுகிறது?
**அறத்தை போல் கூர்மையான அறிவு உடையவரானாலும் மனிதப் பண்பு இல்லாதவரை மரம் போன்றவர் என திருக்குறள் குறிப்பிடுகிறது.**

3. பண்பில்லாதவன் பெற்ற செல்வம் எதை போன்றது?
**பண்பில்லாதவன் பெற்ற செல்வம் தூய்மையற்ற பாத்திரத்தின் தன்மையால் நல்ல பால் திரிவதை போன்றதாகும்.**

4. திருக்குறள் நூல் குறிப்பு எழுதுக?
**திருக்குறள் அறம், பொருள், இன்பம் என்னும் மூன்று பிரிவுகளை உடையது இதில் 133 அதிகாரங்களும், அதிகாரத்திற்கு 10 குறள் என 1330 குறட்பாக்கள் உள்ளன.**

5. திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுவது ஏன்?
**உலகில் உள்ள அனைத்து பின்பற்றத்தக்க சிறந்த அறநெறி கருத்துக்களை கூறுவதால் திருக்குறள் உலகப் பொதுமறை எனப் போற்றப்படுகிறது.**

**இயல்: ஒன்று - உரைநடை**

**தமிழர்களின் வீரக் கலைகள்**

I. **பொருள் தருக**

1. வேளாண்மை - உறவு
2. மல் - வலிமை
3. சிலம்பு - ஒலித்தல்
4. திமில் - காளையின் கொண்டை
5. தாளாண்மை - முயற்சி

II. **எதிர்ச்சொல் எழுதுக**:

1. வீரம் x கோளை
2. இயற்கை x செயற்கை
3. இன்பம் X துன்பம்
4. படைத்திறம் x கொடைத்திறம்
5. போற்றும் x தூற்றும்

III. **பிரித்து எழுதுக:**

1. வாளாண்மை - வாள் + ஆண்மை
2. சிலம்பாட்டம் - சிலம்பு + ஆட்டம்
3. மற்போர் - மல் + போர்
4. வில்லாற்றல் - வில் + ஆற்றல்
5. தனக்கென்று - தனக்கு + என்று

**IV.சேர்த்து எழுதுக:**

1.தன் + காப்பு - தற்காப்பு

2.வீரம் + கலை - வீரக்கலை

3.தாள் + ஆண்மை - தாளாண்மை

4.அம்பு + எய்தி - அம்பெய்தி

5.கொடை + திறம் – கொடைத்திறம்

**V. கோடிட்ட இடங்களை நிரப்புக:**

1.தனித்த நாகரிகமும் பண்பாடும் உடையது தமிழ் மரபு.

2.வாளாண்மையால் பகைவரை வென்றனர்.

3.காலையின் திமிலை பிடித்து 15 மீட்டர் தூரம் ஓடுபவர் வெற்றியாளர்.

4.சிறுவாரைக் கம்பு மூங்கில் இனத்திலிருந்து செய்யப்படுகிறது.

5.வில்வித்தை ஒலிம்பிக் போட்டிகளில் சேர்க்கப்பட்டுள்ளமை தமிழர் கலைகளுக்குப் பெருமையை சேர்ப்பதாகும்.

6.படைக்கலன் ஏதுமின்றி இருவர் போரிடும் விளையாட்டு மற்போர்.

7.தமிழரின் வீரத்தை பறைசாற்றும் விளையாட்டுகளில் ஒன்று ஏறு தழுவுதல்.

8.ஏறு என்பது காளை மாட்டை குறிக்கும்.

9.வாளாண்மையால் பகைவரை வென்றனர்

10.தாளாண்மையால் நன்னிலம் ஆக்கினர்.

**VI. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. காலை | - | வளரி | 2 |
| 2. சிலம்புகலை | - | உலவு | 4 |
| 3. சிறுவாரைக்கம்பு | - | திமில் | 1 |
| 4. வேளாண்மை | - | மூங்கில் | 3 |

**VII. வினாக்களுக்கு விடை அளிக்க:**

1. தமிழர்களின் வீர கலைகளில் இரண்டை குறிப்பிடுக?

**ஏறு தழுவுதல் , சிலம்பாட்டம்**

2. ஏறு தழுவுதல் என்றால் என்ன?

**ஏறு என்பது காளை மாட்டை குறிக்கும். ஏறுதழுவுதல் என்பது காளையை தழுவி அதன் வீரத்தை அடக்குவதாகும்.**

3. சிலம்பாட்டம் பெயர்க் காரணம் தருக?

**சிலம்பு என்றால் ஒலித்தல் என்பது பொருள் கம்பு சுழலும் போது ஏற்படும் ஓசையை அடிப்படையாகக் கொண்டே சிலம்பம் சிலம்பாட்டம் என்னும் பெயர்கள் ஏற்படுகின்றன.**

4. மற்போர் எவ்வாறு நடைபெறுகிறது?

**படைக்கலன் ஏதுமின்றி உடல் வலிமையால் செய்யும் போரே மற்போராகும் இருவர் கைகோர்த்து தலையாலும் கால்களாலும் இடித்தும் உதைத்தும் ஒருவருடன் ஒருவர் போர் செய்வதை மற்போர்.**

5. சிலம்பக் கலையில் பயன்படுத்திய ஆயுதங்கள் எவை?

**சிலம்ப கலையில் மூங்கில் கம்புடன் மான் கொம்பு பிச்சுவா கத்தி சுருள்பட்டா , வளரி போன்ற ஆயுதங்களை பயன்படுத்தினர்.**

## இயல்: ஒன்று – துணைப்பாடம்

## கங்கைகொண்ட சோழபுரம்

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. வட்ட வடிவ கல் 34 அடி குறுக்களவு கொண்டது.

2. நந்தி செங்கற்களால் செய்யப்பட்டது.

3. கோயில் வாயில் தரைமட்டத்தில் இருந்து 20 அடி உயரத்தில் இருந்தது.

4. கயலினி மிகவும் மகிழ்ச்சியோடு இருந்தாள்

5. பாட்டியும் கயலினியும் கங்கைகொண்ட சோழபுரம் செல்கிறார்கள்.

6. கலைச்செல்வி மற்றும் சுண்டேஸ்வர அனுக்கிரக மூர்த்தி ஆகிய சிற்பங்கள் உலகப் புகழ் பெற்றவை.

7. கயல் சோழர்களின் கலை திறனை எண்ணி வியந்தாள்.

**II. பொருத்துக:**

| | | | |
|---|---|---|---|
| 1. பொன்னேரி | - | 34 அடி | 2 |
| 2. விமானம் | - | பாசன வசதி | 1 |
| 3. நந்தி | - | கிணறு | 4 |
| 4. சிங்கம் | - | செங்கற்கள் | 3 |

**III. வினாக்களுக்கு விடையளிக்க:**

1.முதலாம் ராஜேந்திர சோழன் ஏன் கங்கைகொண்ட சோழன் என்று அழைக்கப்படுகிறார்?

**முதலாம் ராஜேந்திர சோழன் வடநாடு சென்று பகைவர்களை வென்று கங்கை நீரை கொண்டு வந்தான் அதன் அடையாளமாக கங்கைகொண்ட சோழன் என்று அழைக்கப்படுகிறான்.**

2.சிங்கமுகக்கிணறு குறிப்பு எழுதுக?

**கிணற்றின் மேல் பகுதியில் சிங்கம் வடிவில் சிற்பம் அமைக்கப்பட்டு வயிற்றுப் பகுதியில் வாயில் அமைக்கப்பட்டிருக்கும் அதுவே சிங்கமுகக் கிணறு.**

3. சோழ கங்கை பேரேரியின் சிறப்பு யாது?

**சுற்றியுள்ள பல்லாயிரக்கணக்கான ஏக்கர் நிலங்கள் இந்த ஏரியின் மூலம் பாசன வசதி பெற்று உழவுத் தொழில் செழிப்பாக இருப்பதே சோழகங்க பேரேரியின் சிறப்பாகும்.**

## இயல் : ஒன்று இலக்கணம்

## இணைப்புச் சொற்கள்

**I. வினா விடை:**

1. இணைப்புச் சொற்கள் எதற்கு பயன்படுகின்றன?

**தொடர்களை இணைப்பதற்கு இணைப்புச் சொற்கள் பயன்படுகின்றன.**

2. இணைப்புச் சொற்கள் நான்கு எழுதுக?

**அதனால் , அல்லது , எனவே , ஏனெனில்**

**III. சரியான விடையை தேர்வு செய்து எழுதுக**

1. கண்ணன் வீட்டிற்கு தாமதமாக வந்திருந்தார் ஏனெனில் அவர் மிதிவண்டி பழுதடைந்து இருந்தது.

**அ. ஆயினும் ஆ. எனினும் இ. ஏனெனில்**

2. நான் நன்றாக படித்து பயிற்சி எடுத்தேன் அப்படி இல்லாவிட்டால் முதல் மதிப்பெண் பெற்றிருக்க முடியாது.

**அ. ஆகையால் ஆ. அப்படி இல்லாவிட்டால் இ. ஏனெனில்**

3. அம்மா இனிமையாக பாடுவார் அப்படியானால் போட்டியில் பங்கு பெற முடியுமா?

**அ.ஏனெனில் ஆ.அப்படியானால் இ.ஆயினும்**

**IV. தொடர் அமைத்து எழுதுக:**

1. ஏனெனில் - **முருகன் பள்ளிக்கு வரவில்லை ஏனெனில் அவனுக்கு உடல் நலமில்லை.**

2. ஆயினும் – **கருமேகங்கள் திரண்டன ஆயினும் மழை பெய்யவில்லை.**

3. அப்படியானால் – **அண்ணன் நன்கு விளையாடுவான் அப்படியானால் விளையாட்டு போட்டியில் அவனுக்கு வாய்ப்பு கிடைக்குமா?**

**V. பிறமொழிச் சொற்களையும் பேச்சுத் தமிழையும் நீக்கி சரியாக எழுதுக:**

1. நான் ஊருக்கு பஸ்ல போனேன்.

**நான் ஊருக்குப் பேருந்தில் சென்றேன்.**

2. நான் டெய்லி ஸ்கூலுக்கு சைக்கிள்ல வரேன்.

**நான் தினமும் பள்ளிக்கு மிதிவண்டியில் வருகிறேன்.**

3. என் பேக்ல புக்கு நோட்டுபுக்கு பென் வைத்திருக்கிறேன்.

**என் பையில் புத்தகம் , குறிப்பேடு , எழுதுகோல் வைத்திருக்கிறேன்.**

**VI. சரியான விடையை தேர்வு செய்து எழுதுக:**

1. மைதானத்தில் மழை நீர் தேங்கி நிற்கிறது அப்படியானால் இன்று நம்மால் விளையாட முடியாதா?

அ.எனவே ஆ.அப்படியானால் இ.ஆயினும்

2. பேச்சுப்போட்டியும் ஓவிய போட்டியும் ஒரே நேரத்தில் நடந்தன அப்படி இல்லாவிட்டால் நான் இரண்டிலும் கலந்து கொண்டிருப்பேன்.

அ. ஏனெனில் ஆ.அப்படியானால் இ.எனவே ஈ.அப்படி இல்லாவிட்டால்

3. கரு மேகங்கள் வானில் திரண்டன ஆயினும் மழை பெய்யவில்லை.

அ.எனவே ஆ.ஆகையால் இ.ஏனெனில் ஈ.ஆயினும்

**V. பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை அளிக்க:**

சூரிய குடும்பத்தில் உள்ள 8 கோள்களுள் பூமியில் மட்டுமே உயிரினங்கள் வாழ்கின்றன. இத்தகு சிறப்புமிகு பூமியின் பாதுகாப்பை வலியுறுத்தி 1970 ஆம் ஆண்டு ஏப்ரல் 22ஆம் தேதி முதன்முதலில் பூமி நாள் கொண்டாடப்பட்டது. அன்று முதல் உலக அளவில் ஒவ்வொரு ஆண்டும் பூமிநாள் கொண்டாடப்படுகிறது. பூமிநாளன்று பசுமை பேரணிகள் சூழலியல் கண்காட்சிகள் கருத்தரங்கங்கள் ஓவியப் போட்டிகள் கட்டுரை போட்டிகள் போன்ற பல்வேறு நிகழ்வுகளை சுற்றுச்சூழல் ஆய்வாளர்கள் ஏற்பாடு செய்வர். இந்நிகழ்வின் வழியாக பூமியை பாதுகாப்பது தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்துவர்.

**வினா விடை:**

1. சூரிய குடும்பத்தில் உள்ள கோள்களின் எண்ணிக்கை எட்டு.
2. பூமி நாள் முதன் முதலில் கொண்டாடப்பட்ட ஆண்டு 1970.
3. பூமி நாள் கொண்டாடப்படுவது ஏப்ரல் 22.
4. பூமி நாள் கொண்டாடப்படுவதன் நோக்கம் பூமியின் பாதுகாப்பு குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்த
5. பூமியை பாதுகாப்பது தொடர்பாக ஒரு முழக்கத் தொடர் எழுதுக: மரங்களை நடுவோம்! மாசில்லா உலகைப் படைப்போம்!

**இயல்: இரண்டு - பாடல்**

**உழவுப் பொங்கல்**

**I. பொருள் தருக:**

1. எங்கணும் - எங்கும்

2. ஏர்த்தொழில் - உழவுத்தொழில்

3. விழலாகும் - வீணாகும்

4. களித்து - மகிழ்ந்து

5. இசைந்து - ஏற்றுக்கொண்டு

6. வையகம் - உலகம்

**II. சரியான விடையை தேர்வு செய்து எழுதுக:**

1.வையகம் என்பதன் பொருள் <u>உலகம்</u>

அ.ஊர் ஆ.வயல் இ.உலகம் ஈ.கிராமம்

2. நலனெல்லாம் இச்சொல்லை பிரித்து எழுத கிடைப்பது

<u>நலன் + எல்லாம்</u>

அ. நலன் + எல்லாம் ஆ. நல+நில்லாம் இ. நலன்+ நெல்லாம்

ஈ.நலம் + எல்லாம்

3. நிறைந்தரம் இச்சொல்லை பிரித்து எழுத கிடைப்பது

<u>நிறைந்து + அறம்</u>

அ.நிறைந்து + அறம் ஆ.நிறைந்த + அறம் இ.நிறை+ அறம்

ஈ.நிறை + தரம்

4. மிகுந்திட இச்சொல்லுக்குரிய எதிர்ச்சொல் <u>குறைந்திட.</u>

அ.மகிழ்ந்திட ஆ.குறைந்திட இ.வந்திட ஈ.அதிகம்

**III. உழவுப் பொங்கல் பாடலில் முதல் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து எழுதுக:**

**பொங்குக - பொங்கல் , உணவு - உயிர்**

**IV. உழவுப் பொங்கல் பாடலில் இரண்டாம் எழுத்து ஒன்று போல் வரும் சொற்களை எடுத்து எழுதுக:**

**பொங்குக - எங்கணும் , இல்லாமல் - செல்லாது**

**V. பாடலில் ஒரே ஓசையில் முடியும் சொற்களை எடுத்து எழுதுக:**

**பொங்குகவே - தங்குகவே , உணவு தரும் - அணிய வரும்**

**VI. பிரித்து எழுதுக:**

1. நிறைந்தறம் - நிறைந்து + அறம்
2. புதுவனம் - புதுமை + வனம்
3. நலனெல்லாம் - நலன் + எல்லாம்
4. இன்பமுற - இன்பம் + உற

**VII. சேர்த்து எழுதுக:**

1. இங்கு + இதன் - இங்கிதம்
2. இசைந்து + உளம் – இசைந்துளம்
3. பொங்கல் + இது - பொங்கலிது
4. உயிரோடு + இருப்பது – உயிரோடிருப்பது

**VIII. எதிர்ச்சொல் எழுதுக:**

1. கழித்து x கவலை
2. வளம் x வறட்சி
3. செல்வர் x வறியவர்

**XI. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. ஏர்த்தொழில் ஒன்றே தெம்பு தரும்.

2. உழவுப் பொங்கல் பாடலின் ஆசிரியர் நாமக்கல் வெ. ராமலிங்கனார்.

3. உழவுத் தொழிலின் மேன்மையை விளக்குகிறது.

4. இன்பமாய் வாழ்வதற்கு ஏற்ற தொழில் ஏர்த்தொழில்.

5. தங்கம் வெள்ளி போன்றவை நம்மால் உண்ண முடியாது.

**X. வினாக்களுக்கு விடையளிக்க:**

1. அனைவரும் இன்பமுடன் வாழ்வதற்கு உதவும் தொழில் எது?

**அனைவரும் இன்பமுடன் வாழ்வதற்கு உதவும் தொழில் ஏர்த்தொழிலாகும்.**

2. உழவுத் தொழிலால் என்னென்ன நன்மைகள் ஏற்படுகின்றன?

**உழவுத் தொழிலால் செல்வம் சேரும் உணவு கிடைக்கும் உடையும் தரும் நன்மைகள் யாவும் விளையும்.**

3. பொங்கலை நாம் எவ்வாறு கொண்டாட வேண்டும் என கவிஞர் கூறுகிறார்?

**பொருள் இல்லாதவரும் செல்வமுடையவரும் இணக்கமாய் வாழும் திருநாள் பொங்கல் திருநாளே ஆகையால் ஏற்றம் தரும் ஏர்த் தொழிலின் பெருமையை உணர்ந்து அனைவரும் உழவு பொங்கலிட்டு பயிர் வளம் பெருக்குவோம்.**

## இயல் : இரண்டு - உரைநடை

## விதை திருவிழா

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. விதை திருவிழா நடந்த ஊர் <u>கன்னியாகுமரி</u>

2. அரங்கில் எல்லோரும் <u>இயற்கை</u> உணவை சுவைத்து மகிழ்ந்தனர்.

3. நடுநிலைப் பள்ளியில் <u>விதைத்திருவிழா</u> நடந்தது.

4. விளம்பரத்தாள்களை <u>தலைமையாசிரியர்</u> வழங்கினார்.

5. ரசாயன பூச்சி மருந்தால் <u>மண்ணின்</u> தன்மை கெடுகிறது.

**II. பொருள் தருக:**

1. அனுமதி - இசைவு
2. உற்சாகம் - மகிழ்ச்சி
3. ஆவலுடன் - ஆர்வமுடன்
4. கனிவான - அன்பான
5. ரசாயன - வேதியியல்

**III. எதிர்ச்சொல் எழுதுக:**

1. காலை x மாலை
2. அரிய x எளிய
3. இனிப்பு x கசப்பு
4. இயற்கை x செயற்கை

**IV. பிரித்து எழுதுக:**

1. வகுப்பாசிரியர் - வகுப்பு + ஆசிரியர்
2. என்னென்ன - என்ன + என்ன
3. பயனுள்ள - பயன் + உள்ள
4. அழைப்பிதழ் - அழைப்பு + இதழ்
5. விதைத்திருவிழா - விதை + திருவிழா

**V. சேர்த்து எழுதுக:**

1. தலைமை + ஆசிரியர் - தலைமையாசிரியர்

2. சிறுமை + தானியம் - சிறுதானியம்

3. பாசி + பயிறு - பாசிப்பயிறு

4. வழிபாடு + கூட்டம் - வழிபாட்டுக்கூட்டம்

5. வீடு + தோட்டம் - வீட்டுத்தோட்டம்

**VI. வினாக்களுக்கு விடை எழுதுக:**

1. மாணவர்களை எங்கே அழைத்துச் செல்வதாக தலைமை ஆசிரியர் கூறினார்?

**அருகிலுள்ள மேல்நிலைப் பள்ளியில் நடைபெறும் விதை திருவிழாவிற்கு மாணவர்களை அழைத்துச் செல்வதாக தலைமை ஆசிரியர் கூறினார்.**

2. விளம்பரத்தாளில் என்ன செய்தி இருந்தது?

**விளம்பரத்தாளில் விதைத்திருவிழா நடைபெறும் இடம் நேரம் ஆகியனவும் விழாவை மாவட்ட ஆட்சியர் தொடங்கி வைப்பார் எனவும் சிறந்த படைப்புகளுக்கு பரிசுகள் உண்டு என்ற செய்தியும் இருந்தது.**

3. பாதிப்பு என்று எழுதப்பட்ட அரங்கத்தில் என்ன செய்தி சொல்லப்பட்டது?

**ரசாயன விதைகள் , ரசாயன பூச்சி மருந்துகளை பயன்படுத்துவதால் மண்ணின் தன்மை கெடுகிறது இதை தடுக்கும் வகையில் இயற்கை முறையில் வேளாண்மை செய்ய வேண்டும் என்பதை பாதிப்பு என எழுதப்பட்ட அரங்கத்தில் சொல்லப்பட்ட செய்தியாகும்.**

## இயல்: 2 துணைப்பாடம்

## எது சிறந்தது?

**I. கோடிட்ட இடத்தை நிரப்புக:**

1. மங்கையர்க்கரசி நேர்மை மிக்கவராக விளங்கினார்.

2. கிராமத்தலைவர் அரசியிடம் வழக்கைக் கொண்டு வந்தார்

3. செல்வந்தர் 100 பொற்காசுகள் கொண்ட பொற்கிழியை பரிசளிப்பதாக கூறினார்.

4. ஒரு காணி நிலத்தை கொண்டு பத்து குடும்பங்கள் வாழ்கின்றன.

5. மும்மடங்கு நெல் உற்பத்தி செய்தவர் முதிய விவசாயி.

**II. வினாக்களுக்கு விடையளிக்க:**

1. அரசியிடம் கிராமத் தலைவர் கொண்டு வந்த வழக்கு யாது?

**அரசு சாதனை புரிபவருக்கு 100 பொற்காசுகள் வழங்குமாறு செல்வந்தர் பொற்கிழி ஒன்றை பஞ்சாயத்தாரிடம் வழங்கினார் சாதனை புரிந்த நால்வருக்கும் பகிர்ந்தளிக்க முடிவு செய்ததை ஏற்க மறுத்து ஒவ்வொருவரும் பரிசுத்தொகை முழுவதும் தங்களுக்கே வேண்டும் என்றனர். இந்த வழக்கை அரசியிடம் கிராம தலைவர் கொண்டு வந்தார்.**

2. விவசாயியின் சாதனை தான் உயர்ந்தது என்று அரசி கூற காரணம் என்ன?

**விவசாயி தமது ஒரு காணி நிலத்தில் மும்மடங்கு நெல் உற்பத்தி செய்து சாதனை படைத்துள்ளார் எந்த அளவிற்கு பாடுபட்டு உழைத்திருந்தால் இந்த அளவு பலன் காண முடியும் மேலும் 10 குடும்பங்களுக்கு பயன் கிடைத்துள்ளது. எனவே பொற்கிழி பெற தகுதியானவர் இவர்தான் என அரசியல் தீர்ப்பு வழங்கினார்.**

## இயல் : இரண்டு - இலக்கணம்

## அடுக்குத்தொடர் இரட்டைக்கிளவி

**I. வினா விடை:**

1. இரட்டைக்கிளவி என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக?

**ஒரு சொல் இரண்டு முறைக்கு மேல் அடுக்கி வரும். பிரித்தால் பொருள் தராது. எடுத்துக்காட்டு: கலகல , படபட**

2. அடுக்குத்தொடர் என்றால் என்ன? எடுத்துக்காட்டு தருக?

**ஒரே சொல் மீண்டும் மீண்டும் அடுக்கி வரும் பிரித்தால் பொருள் தரும் .**

**எடுத்துக்காட்டு: வா வா , பாம்பு பாம்பு**

**II. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக:**

1.காலில் காயம் பட்ட இடத்தில் விண்விண் என வலித்தது

(கடகட, விண்விண், படபட, கனகன)

2. குயில் கூகூ என கூவியது.

(கீச்கீச், கூகூ, பக்பக், கொக்கொக்)

3. மணமக்களை வாழ்க வாழ்க என வாழ்த்தினர்.

(வருக வருக, வாழ்க வாழ்க, வளர்க வளர்க)

**III. இரட்டைக்கிளவி அடுக்குத்தொடர் என தனித்தனியே பிரித்து எழுதுக:**

( வாழ்க வாழ்க , மல மல , சர சர , வருக வருக , கடகட , வெற்றி வெற்றி , கணகண , வேண்டாம் வேண்டாம் )

| இரட்டைக்கிளவி | அடுக்குத்தொடர் |
|---|---|
| மளமள | வாழ்க வாழ்க |
| சரசர | வருக வருக |
| கடகட | வெற்றி வெற்றி |
| கணகண | வேண்டாம் வேண்டாம் |

**IV. சொற்களை வரிசைப்படுத்தி தொடராக்குக:**

1. பட்டம் தேடி ஆடிப் விதை – ஆடிப்பட்டம் தேடி விதை

2. தேடு ஏரைத் தேடின் சீரை த் – சீரைத் தேடின் ஏரைத் தேடு

3. உழுவதை அகல விட உழு ஆழ – அகல உழுவதை விட ஆழ உழு

**V. தொகைச் சொற்களை விரித்து எழுதுக:**

1. முத்தமிழ் – இயல் , இசை , நாடகம்

2. நாற்றிசை - கிழக்கு , மேற்கு , வடக்கு , தெற்கு

3. ஐந்திணை - குறிஞ்சி , முல்லை , மருதம் , நெய்தல் , பாலை

4. அறுசுவை - இனிப்பு , புளிப்பு , கசப்பு , கார்ப்பு , உவர்ப்பு , துவர்ப்பு

**VI. வரைபடத்தை படித்தறிந்து வினாக்களுக்கு விடை தருக:**

பருவத்தேர்வு – மதிப்பெண்கள்

**பெயர் : குறள்மதி**
**வகுப்பு : ஐந்து**

வரைபடத்தில் உள்ள விவரங்கள்:

| பாடம் | மதிப்பெண்கள் |
|---|---|
| தமிழ் | 95 |
| ஆங்கிலம் | 90 |
| கணக்கு | 100 |
| அறிவியல் | 90 |
| சமூக அறிவியல் | 80 |

**வினாக்கள்**:

1. குறள்மதி 100 மதிப்பெண் பெற்றுள்ள பாடம் எது?

   குறள்மதி 100 மதிப்பெண் பெற்றுள்ள பாடம் கணக்கு.

2. எந்தப் பாடத்திற்கு 95 மதிப்பெண் கிடைத்துள்ளது?

   தமிழ் பாடத்தில் 95 மதிப்பெண் கிடைத்துள்ளது.

3. ஒரே மதிப்பெண் கிடைத்துள்ள பாடங்கள் எவை?

   ஆங்கிலம் , அறிவியல்

4. குறள்மதிப் பெற்ற மூத்த மதிப்பெண்களைக் குறிப்பிடுக.

   குறள்மதி பெற்ற மொத்த மதிப்பெண் 455.

5. குறள்மதி சமூக அறிவியல் பாடத்தில் பெற்ற மதிப்பெண்?

   குறள்மதி சமூக அறிவியல் பாடத்தில் பெற்ற மதிப்பெண் 80.